**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – மதுரை மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.ஏ.கருப்பையா, அலுவலக உதவியாளர் என்பவரின் மகன் திரு.அ.க.ஜெகன், இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை**

**அரசாணை (3ப) எண்.04** **நாள் 13.01.2023.**
**சுபகிருது, மார்கழி 29.**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.8158/ 2020/ஊ.வ.3, நாள்: 11.05.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.33453/2021/டி3, நாள்: 16.11.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 14.11.2017 அன்று பணியிடைக்காலமான திரு.ஏ.கருப்பையா என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.அ.க.ஜெகன் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 11.05.2021 பிற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன் திரு.அ.க.ஜெகன் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 13.02.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 10.06.1986 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 31 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும்,

அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் சேடபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.அ.க.ஜெகன் என்பவரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 11.05.2021 பிற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 02.01.2023-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.18739/ட்டி1/2022-1, மற்றும் மனித வள மேலாண்மை துறையின் அலுவல் சாரா எண்.3859765/ஜி.1/2022-1, நாள்:04.01.2023--ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்.
திரு.அ.க.ஜெகன், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, மதுரை மாவட்டம்.
(__வழி__: மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், மதுரை மாவட்டம்.

__நகல்:__

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.